STC 403/2025. 22.07.2026

ம.சா.2 ரங்கநாதன் (குறுக்கு விசாரணை)

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். புகார்தாரரை எனக்கு 15 வருடங்களாக தெரியும் என்னுடைய பக்கத்து வீட்டுகாரர் ஆவார். எதிரியை எனக்கு சுமார் 10 வருடங்களாக தெரியும். புகார்தாரர் விவசாயம் செய்து வருகிறார். புகார்தாரர் TATA capital finance -ல் பணிபுரிந்த விவரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் வருமான வரி செலுத்துகிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு சுமார் 6 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எதிரி என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய ஊரில் இருந்து எதிரியின் ஊர் சுமார் 10 கி.மீ. இருக்கும். எதிரிக்கு பணம் தேவைப்பட்டதாக நான் என்னுடைய பிரமாண வாக்குமூலுத்தில் சொல்லியுள்ளேன் என்றும், அதற்கு முன் எப்போது கேட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி புகார்தாரரிடம் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றும், எப்போது பணம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் 08.06.2025 அன்று காலை 10 மணிக்கு வாங்கினார். புகார்தாரரிடம் எதிரி பணம் வாங்க வருவதற்கு முன்பே நான் புகார்தாரரின் வீட்டில் இருந்தேன். நான் நண்பர் என்ற முறையில் புகார்தாரரின் வீட்டிற்கு செல்வேன். புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது நானும், புகார்தாரர் எதிரி மட்டும் தான் இருந்தோம். புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது 500 ரூபாய் தாள்களை எத்தனை என தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது அதற்கான ஆவணங்கள் ஏதேனும் புகார்தாரர் கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரி புகார்தாரரிடம் பணம் பெற்று கொண்டு 2 மாதங்களில் திரும்ப தருவதாக கூறினார். எதிரியிடம் காசோலையை வாங்கிய பின்

புகார்தாரர் பணம் கொடுத்தார். மேற்படி காசோலையானது எங்கள் முன் எழுதினாரா என்றால் இல்லை. காசோலையை நான் கையில் வாங்கி பார்க்கவில்லை. அதனால் எதிரியின் கையொப்பம் இருந்தது என்று எனக்கு தெரியாது. காசோலையை நிரப்பட்ட விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாதாரருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்தது தொடர்பாக எனக்கு ஏதும் தெரியாது. புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த பணத்தை தன்னுடைய விவசாய நில வருமானத்தில் இருந்து கொடுத்தாக கூறினார். மேற்படி தொகையை புகார்தாரர் தன்னுடைய கையில் இருந்து தான் கொடுத்தார். புகார்தாரரின் வங்கி கணக்கு எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி கொடுத்த காசோலையை எப்போது வங்கியில் செலுத்தினார் என்ற விவரம் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. புகார்தாரர் காசோலையை வங்கியில் செலுத்தும் போது புகார்தாரருடன் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் வங்கியில் செலுத்திய காசோலை போது திருப்பட்டபோது அதனை பெற்றுக்கொள்ள நானும் புகார்தாரருடன் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் எப்போது பணத்தை திரும்ப கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போன் மூலமாகவும், நேரிலும் கேட்டுள்ளார். நானும் அப்போது உடன் சென்றேன். நான் எதிரி வேலை செய்யும் இடத்திற்கு சென்று கேட்டு இருக்கிறேன். போன் மூலமாக பணம் கேட்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார்தாரருக்கு தான் தெரியும். மேற்படி பணத்தை புகார்தாரர் கொடுக்கும் போது எந்த வித ஆவணமும் இன்றி ஏன் இவ்வளவு பெரிய தொகை கொடுக்கிறாய் என்று கேட்டேனா என்றால் எதிரி அதற்கு காசோலை கொடுத்துள்ளார். எதிரியின் காசோலை கனரா வங்கி அரூர் கிளையை சேர்ந்தது.

என்ன காரணத்திற்காக எதிரி வங்கி கணக்கு காசோலை முடிக்கப்பட்டது என வங்கியில் சென்று நான் கேட்டானே என்றால் புகார்தாரர் கேட்டுயிருப்பார். எந்த தேதியில் சட்ட அறிவிப்பை புகார்தாரர் அனுப்பினார் என்று எனக்கு நியாபகம் இல்லை. சட்ட அறிவிப்பை எதிரி வாங்க மறுத்துவிட்டதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு ஈச்சம்பாடியை சேர்ந்த கோவிந்தன் மகன் சுபாஷ் என்பவரை பற்றி தெரியுமா என்றால் கேள்வி பட்டுள்ளேன். சுபாஷ் என்பவரும் புகார்தாரரும் சேர்ந்து நிதி நிறுவனம் நடத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிதி நிறுவனத்தில் எதிரி கடன் பெற்று அதற்கு பிணையமாக தான் இந்த வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்றும் கடனை திரும்ப செலுத்திய பின்பு காசோலையை திரும்ப தராமல் புகாதாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் தொடர்பாக மோசடியாக அந்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி போதிய வருமானம் உள்ளது என்றும் புகார்தாரரிடம் 1 லட்சம் ரூபாய் வாங்க வேண்டிய தேவை இல்லைஎன்றும் புகாதாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு புகாதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**